LIBRARY
0 4 MAY 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF ARTS AND CULTURE

## THIRD YEAR SECOND SEMESTER SPECIAL DEGREE EXAMINATION IN ECONOMIC (2011/2012 BATCH) 2013 / 2014

## NOVEMBER/ DECEMBER 2016

## ECS 3213 BASIC ACCOUNTING

**Time: 03 Hours**

ஏவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.

---

1. i. கணக்கீடு என்றால் என்ன?

(புள்ளிகள் 05)

ii. ரமேஸ் சில்லறை வியாபாரியாவர். அவர் ஒவ்வொரு வருடமும் 31 ஐப்பசியில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்றார். 31 ஐப்பசி 2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான பரீட்சை மீதி பின்வருமாறு.

பரீட்சை மீதி

| விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| மூலதனம் | | 1,078,150 |
| கொள்வனவு | 526,300 | |
| விற்பனை | | 1,022,400 |
| திருப்பங்கள் | 4,200 | 6,600 |
| கழிவுகள் | 3,250 | 5,500 |
| ஆரம்ப இருப்பு | 108,100 | |
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 11,500 | |
| வாடகை | 24,000 | |
| தொலைபேசி | 9,500 | |
| சம்பளம் | 65,200 | |
| பெற்றவட்டி | | 3,500 |
| ஏனைய செலவுகள் | 4,200 | |
| காணி கட்டடம் (காணியின் பெறுமதி ரூ.600,000) | 1,250,000 | |
| கட்டட பெறுமான தேய்வு ஏற்பாடு 01.11.2015 | | 108,000 |
| தளபாடம் | 60,000 | |
| தளபாடம் பெறுமான தேய்வு ஏற்பாடு 01.11.2015 | | 23,000 |

| | | |
|---|---|---|
| கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | 85,000 | 60,000 |
| வங்கி | 105,000 | |
| வங்கிக் கட்டணம் | 2,500 | |
| எழுதுகருவி | 8,500 | |
| முற்பண காப்புறுதி 01.11.2015 | 2,800 | |
| அட்டுறு எழுதுகருவி 01.11.2015 | | 900 |
| காசு | 38,000 | |
| | **2,308,050** | **2,308,050** |

**மேலதிக தகவல்கள்**

1. இறுதி இருப்பு ரூ.105,300.
2. அட்டுறு எழுதுகருவி 31.10.2016ல் ரூ.1,700 மற்றும் கையிலுள்ள எழுதுகருவியின் இறுதி இருப்பின் பெறுமதி ரூ.1,300.
3. மாதம் ஒன்றுக்கான வாடகை ரூ.1,500
4. அறவிட முடியாக்கடனாக ரூ5,000 வை பதிவழித்து 10% ஐயக்கடன் ஏற்பாட்டிற்கு மாற்றுக.
5. கட்டடத்திற்கு 5% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.
6. தளபாடத்திற்கு 10% பெறுமானத்தேய்விடல் வேண்டும்.
7. பெறவேண்டிய வட்டி 31.10.2016ல் ரூ.2,000 ஆகும்.

**வேண்டப்படுவது:**

அ) 31 ஐப்பசி 2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்று

ஆ) 31 ஐப்பசி 2016 இல் உள்ளபடியான நிதிநிலமைக்கூற்று

**(புள்ளிகள் 20)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

02. i. இரட்டைப் பதிவு என்றால் என்ன?

**(புள்ளிகள் 05)**

ii. கபில் நிறுவனம் 01.10.2016ல் பின்வரும் மீதிகளுடன் வியாபாரத்தை ஆரம்பித்தார்.

| | |
|---|---|
| காசுமீதி | ரூ.40,000 |
| வங்கி மேலதிகப் பற்று | ரூ.10,500 |
| சரக்கிருப்பு | ரூ.18,000 |
| கடன்பட்டோர் | |
| ராஜா | ரூ.3,500 |

| | |
|---|---|
| ரமணன் | ரூ.6,250 |
| கடன்கொடுத்தோர் | |
| காந்தன் | ரூ.6,400 |
| கமல் | ரூ.3,500 |
| 10% வங்கிக்கடன் | ரூ.50,000 |
| தளபாடம் | ரூ.100,000 |

ஐப்பசி மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

2. காந்தன் இடமிருந்து வாங்கிய பண்டங்கள் ரூ.16,000.
4. காசோலை மூலம் கொள்வனவு ரூ.8,000.
5. சுரேஸ் இடமிருந்து வாங்கிய பண்டங்கள் ரூ.12,500.
6. காசுக் கொள்வனவு ரூ.7,500.
7. காசுக்கு விற்ற பண்டங்கள் ரூ.18,000.
8. காசோலை மூலம் விற்பனை ரூ.42,000 அன்றே வங்கியிலிடப்பட்டது.
10. காந்தனுக்கு திருப்பி அனுப்பிய பண்டம் ரூ.3,000.
11. சுரேஸ்க்கு திருப்பி அனுப்பிய பண்டம் ரூ.2,500.
12. ராஜாவிற்கு விற்பனை ரூ.13,500.
14. தம்பூரோ நிறுவனத்திடம் கடனுக்கு வாங்கிய தளபாடம் ரூ.15,000.
16. ரமணனிற்கு விற்பனை ரூ.15,600.
19. ராஜா, ரமணன் முறையே ரூ.2,500, ரூ.3,200 பெறுமதியான பொருட்களை திருப்பி அனுப்பினார்கள்.
22. காந்தன், கமல் இருவரினதும் ஆரம்ப நிலுவைகள் முறையே 5%, 10% கழிவு நீக்கி காசோலையாக செலுத்தப்பட்டது.
24. ராஜா, ரமணன் இருவரினதும் ஆரம்ப நிலுவைக் கடன்களை முறையே 10%, 5% கழிவு நீக்கி காசோலையாக தந்தார்கள்.
28. பெற்ற காசோலைகள் வங்கியிலிடப்பட்டது.

**வேண்டப்படுவது:**

அ) மூல ஏடுகளில் பதிவு செய்தல்.

ஆ) பேரேடுகளை தயாரித்தல்.

இ) பரீட்சை மீதி தயாரித்தல்.

**(புள்ளிகள் 20)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

03. i. கணக்கீட்டு தகவல்களில் அக்கரை செலுத்தும் நபர்களை விபரிக்க.

(புள்ளிகள் 05)

ii. அட்டுறு எண்ணக்கரு, தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு, கொள்கை மாறா எண்ணக்கரு மற்றும் புத்திசாதுரிய எண்ணக்கரு போன்றவற்றினை உதாரணத்துடன் விளக்குக.

(புள்ளிகள் 10)

iii. அரவிந்தன் நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஆவணி மாதத்திற்கான சில்லறைக் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

1. சில்லறை காசாளனுக்கு ரூ.1,000 முற்பணம் செலுத்தப்பட்டது.
5. பிரையான செலவு ரூ.80.
7. முத்திரை செலவு ரூ.80.
9. காகிதாதி வாங்கியது ரூ.50.
10. எழுதுகருவி வாங்கியது ரூ.40.
10. ரவிக்கு கொடுத்தது ரூ.250.
12. எழுதுகருவி வாங்கியது ரூ.50.
14. முத்திரைச செலவு ரூ.40,
15. போக்குவரத்துச் செலவு ரூ.40
16. பிரையான செலவு ரூ.80.
19. முத்திரை செலவு ரூ.70.
26. கடித உறை வாங்கியது ரூ.60.
30. சில்லறைக்காசாளனது செவுகள் மீள்நிரப்பப்பட்டது.

**வேண்டப்படுவது:**

அ) சில்லறைக் காசேட்டில் பதிவு செய்க.

ஆ) பேரேடுகளை தயாரிக்குக.

(புள்ளிகள் 10)

(மொத்தம் 25 புள்ளிகள்)

i. தர்ஷன் நிறுவனத்தின் புரட்டாதி மாதத்தின் காசேட்டின் படி வங்கி நிரல் பின்வருமாறு.

| திகதி | விபரம் | ரூபா | திகதி | விபரம் | ரூபா |
|---|---|---|---|---|---|
| 01.09.2016 | மீதி | 72,000 | 02.09.2016 | கொள்வனவு கா.இ 2587 | 12,250 |
| 07.09.2016 | ரவி கா.இ 6785 | 16,000 | 09.09.2016 | முகுந்தன் கா.இ 2588 | 6,750 |
| 10.09.2016 | குமார் கா.இ 785 | 9,750 | 11.09.2016 | சாந்தன் கா.இ 2589 | 2,800 |
| 16.09.2016 | அமல் கா.இ 6897 | 6,250 | 21.09.2016 | வாடகை கா.இ 2590 | 4,500 |
| | | | 24.09.2016 | சுரேன் கா.இ 2591 | 3,700 |
| | | | 30.09.2016 | மீதி கீ.கொ.செ | 74,000 |
| | | 104,000 | | | 104,000 |

புரட்டாதி மாதத்தின் தர்ஷன் நிறுவனத்தின் வங்கிக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|
| 01.09.2016 மீதி | | | 72,000 |
| காசோலை (2587) | 12,750 | | 59,250 |
| வைப்பு (6785) | | 16,000 | 75,250 |
| காசோலை (2588) | 6,750 | | 68,500 |
| வைப்பு (785) | | 9,750 | 78,250 |
| காசோலை (2589) | 2,800 | | 75,450 |
| வைப்பு (9682) | | 8,000 | 83,450 |
| நிலையியற் கட்டளை | 3,000 | | 80,450 |
| வங்கிக் கட்டணம் | 1,000 | | 79,450 |
| 30.09.2016 மீதி | | | 79,450 |

**வேண்டப்படுவது:**

அ) தர்ஷன் நிறுவனத்தின் புரட்டாதி மாதத்தின் காசேட்டின் படி வங்கி மீதி வங்கிக் கூற்று மீதியுடன் வேறுபடுவதற்கான காரணத்தினை கண்டறிக.

ஆ) சீராக்கிய காசேட்டினை 30 புரட்டாதி 2016ல் தயாரித்துக் காட்டுக.

இ) 30.09.2016ல் உள்ளவாரான வங்கி கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்குக.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

ii. தனி உரிமையாளரான கரிஷ்ணன் நிறுவனத்தின் 01.01.2016 இல் உள்ளவாரான ஐந்தொகை கீழே தரப்பட்டுள்ளது.

01.01.2016 இல் உள்ளவாரான ஐந்தொனை

| | ரூ. '000 |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| தளபாடம் (கிரயம் ரூ.160,000) | 110 |
| சரக்கிருப்புக்கள் | 60 |
| கடன்பட்டோர் | 35 |
| காசு | 35 |
| | 240 |
| **பொறுப்புக்கள்** | |
| உரிமையான்மை | 185 |
| கடன்கொடுத்தோர் | 55 |
| | 240 |

2016 தை மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

| திகதி தை | கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் |
|---|---|
| 03 | ரூ.35,000 இற்கு பொருட்கள் காசுக்கு விற்கப்பட்டது. இப்பொருட்களின் கிரயம் ரூ.32,000 ஆகும். |
| 06 | ரூ.30,000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. |
| 12 | 06.01.2016 இல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூ.6,000 பெறுமதியானவை விநியோகஸ்தருக்குத் திருப்பியனுப்பட்டன. |
| 14 | ரூ.45,000 இற்கு பொருட்கள் கடனுக்கு விற்கப்பட்டன. இப் பொருட்களின் கிரயம் ரூ.38,000 ஆகும். |
| 17 | கடன்பட்டோரிடமிருந்து ரூ.10,000 காசு பெறப்பட்டது. மேலும் ரூ.2,000 அறவிட முடியாக்கடனாகப் பதிவழிக்கப்பட்டது. |
| 21 | ஊழியருக்கான சம்பளமாக ரூ.8,000 செலுத்தப்பட்டது. |
| 25 | 01.01.2016 இலுள்ள கடன்கொடுத்தோர் மீதியானது ரூ.6,000 காசுக் கழிவுடன் காசாகக் கொடுத்துத் தீர்க்கப்பட்டது. |
| 27 | சொந்த தேவைக்காக உரிமையாளர் காசாக ரூ.4,000 ஐப் பற்றியுள்ளார். |
| 30 | 17.01.2016இல் அறவிடமுடியாக் கடனாக பதிவழித்த தொகையானது காசாப் பெறப்பட்டது. |
| 31 | ஜனவரி மாதத்திற்கான தளபாடத்திற்கு பெறுமானத் தேய்வாக ரூ. 5,000 செய்யப்பட்டது. |

**வேண்டப்படுவது:**

அ) கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் பயன்படுத்தி மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பவற்றின் விளைவுகளை அதன் பெறுமதியுடன் காட்டுக.

**(10 ள்ளிகள்)**

ஆ) தை 2016 மாதத்திற்கான தேறிய இலாபம் அல்லது நட்டத்தினைக் கணிக்க.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

5. i. லக்கி விளையாட்டுக் கழகத்தின் புத்தகங்களிலிருந்து பின்வரும் விபரங்கள் பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

a. 31.03.2016ல் சங்கத்திலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக இருப்பதுடன் அங்கத்தவர் ஒருவருக்கான சந்தாக் கட்டணம் வருடமொன்றிற்கு ரூ.2,000 ஆகும்.

b. சங்கத்தின் சொத்துக்களும் பொருப்புக்களும்:

| விபரம் | 31.03.2016<br>ரூ. '000 | 31.03.2015<br>ரூ. '000 |
|---|---|---|
| நிலுவையிலுள்ள சந்தாக்கள் | 8 | 12 |
| முற்பனமாக பெற்ற சந்தாக்கள் | 9 | 7 |
| விளையாட்டு உபகரணங்கள் | 90 | 80 |
| காணி கட்டம் | 205 | 210 |
| காசு | ? | 30 |

c. 31.03.2016ல் முடிவடைந்த வருடத்தில் பின்வரும் செலவுக் ஏற்பட்டதுடன் அவை காசாக செலுத்தப்பட்டுள்ளன.

| | ரூ. '000 |
|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது | 70 |
| மின்சாரம் | 48 |
| காவலாளர் சம்பளம் | 60 |
| மைதான பராமரிப்பு செலவுகள் | 20 |

d. 31.03.2016ல் முடிவடைந்த வருடத்தில் சங்கத்திற்கு ரூ.150,000 நன்கொடைகள் பெறப்பட்டது.

வேண்டப்படுவது:

அ) 01.04.2015ல் உள்ளவாரான திரண்ட நிதி.

ஆ) 31.03.2016ல் கையிலுள்ள காசு.

இ) 31.03.2016ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவுக் கணக்கு.

ஈ) 31.03.2016ல் உள்ளபடியான நிதி நிலமைக் கூற்று

(15 புள்ளிகள்)

ii ஈஸ்ட் நிறுவனத்தின் காணக்கேடுகளிலிருந்து பின்வரும் வழுக்கள் கண்டறியப்பட்டது.

அ) கொள்வனவு நாளேட்டின் கூட்டுத்தொகை ரூ.58,260 கொள்வனவுக் கணக்கில் ரூ.52,860 ஆக பதியப்பட்டது.

ஆ) கொடுத்த கழிவு ரூ.380 பெற்ற கழிவுக் கணக்கின் செலவுப் பக்கத்தில் ரூ.380 ஆக பதியப்பட்டது.

இ) காப்புறுதிக்கு செலுத்தியது ரூ.12,500 வாடகைக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

ஈ) மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ.3,270 முற்றாக கணக்குகளில் பதியப்படவில்லை.

உ) மோட்டார் திருத்தச் செலவு ரூ.18,600 மோட்டார் கணக்கில் பதியப்படடுள்ளது.

வேண்டப்படுவது:

மேற்குறிப்பிட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)